REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 206

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY | THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: தைமீ 28உ புதன் (10—2—54) ★ ★ ★ வெளியூர்: தைமீ 29உ வியாழன் (11—2—54)

பம்பாய்க்கு இந்திய சர்க்கார் பரிவு!

அரிசி விலை ஏற்றத்தைத் தடுக்கத் தீவிர ஏற்பாடு

—[o]—

எட்டு விசேஷ ரயில்களில் தானியம் பறக்கிறது

மத்தியப் பிரதேசம், பஞ்சாப், பெப்சு ஒத்துழைக்கும் அற்புதம்

பம்பாய், பிப் 10—

பம்பாயில் உணவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிட்டது. அதன் விளைவாக அரிசி விலை ஏறத் தொடங்கிவிட்டது. அதைக் கட்டுப்படுத்த யூனியன் சர்க்கார் அதிதீவிரமாக நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளது.

எட்டு பெரும் அளவு புகை வண்டித் தொடர்களில் மட்ட ரக அரிசி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன.

பஞ்சாபிலும், பெப்சுவிலும் ஓடிக்கொண்டிருந்த 5 புகை வண்டித் தொடர்கள், பம்பாய்க்கு அரிசி ஏற்றிச் செல்ல ஒதுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று அரிசி ஏற்றிக்கொண்டு பம்பாயை அடைந்துவிட்டது. இது வட புகை வண்டித் தொடரின் ஏற்பாடு.

அடுத்தாற்போல் மத்திய புகை வண்டித் தொடரும் மத்தியப் பிரதேசத்திலிருந்து 3 புகை வண்டித் தொடர்களை அனுப்பியுள்ளது.

ஒவ்வொரு புகை வண்டித் தொடரும் 1000 டன் வீதம் அரிசியை ஏற்றிச் செல்லும் என்று தெரிய வருகிறது.

களம் நோக்கி ஆசிரியர்கள்!

23,000 பேர் வேலை நிறுத்தம்!

கல்கத்தா, பிப். 10—

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 23,000 உபாத்தியாயர்கள் அதிகமான சம்பள உயர்வு கோரி, இன்று முதல் வேலை நிறுத்தம் செய்வரெனத் தெரிகிறது.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் 125 பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட மாட்டார்களென அறிவிக்கப்படுகிறது.

ஆசிய நாடுகளுக்குப் — பொருளாதார உதவி!

நீண்டகால கடன் அடிப்படையில் இயந்திர சாதனங்களை அளிக்க முடிவு

ஆசிய தூரக்கிழக்குப் பொருளாதார மாநாட்டில் சோவியத் பிரதிநிதி அறிவிப்பு

கண்டி, பிப். 9—

தொழில் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் ரஷியா அடைந்துள்ள முன்னேற்றத்தை வந்து பார்க்கும்படி ஆசிய தூரகிழக்கு நாடுகளின் பிரதிநிதிகளை சோவியத் பிரதிநிதி மென்ஷிகோவ் ஆசிய தூரக்கிழக்குப் பொருளாதாரக் கமிஷன் மாநாட்டில் பேசுகையில் அழைத்தார்.

ஆசிய தூரக்கிழக்கு நாடுகள் உற்பத்தி செய்யும் பண்டங்களை நிலையான விலைகளில் வாங்கிக்கொள்வதற்கு நீண்டகால ஒப்பந்தம் செய்துகொள்ளவும், இயந்திரங்களையும், கருவிகளையும் நீண்டகால கடன் அடிப்படையில் கொடுத்துதவவும் ரஷியா தயாராயிருக்கிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஐ. நா. நுணுக்க உதவித் திட்டத்தின்கீழ் நுணுக்க உதவிக்கு அந்த நிதியிலிருந்து விண்ணப்பங்கள் வந்தால் அவற்றை ரஷியா கவனிக்கும்.

அந்தப்புரத்தில் நிகழ்ந்தது அம்பலமேறுகிறது!

—(:)—

வடநாட்டு மூலதனம் இலங்கைக்குக் குடியேறுகிறது

நேரு—கொத்தலவாலை ஒப்பந்தம் ஏற்பட்டதின் அந்தரங்கம்?

கொழும்பு, பிப் 10—

பம்பாயில் முதல் ரக முதலாளிகளில் ஒருவரான டி. என். ஷாப் என்பவர் தற்சமயம் இலங்கையில் வட்டமிட்டுக்கொண்டு இருக்கிறார். அங்கு புதிதாக பஞ்சாலையையும், செயற்கை பட்டு நெசவாலையையும் திறப்பதற்கான முயற்சியில் அவர் பலமாக ஈடுபட்டு இருக்கிறார்.

யும், நிதி அமைச்சரையும் சந்தித்து இதுபற்றி அவர் விவாதித்ததாகத் தெரிகிறது.

உதவி அனைத்தும் அளிப்பதாக சர்க்கார் சார்பில் கூறப்பட்டதாகவும், வெளிநாட்டு மூலதனத்தையும், நிபுணர்களையும் ஏற்றுக் கொள்ள இலங்கை சர்க்கார் எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்று வாக்குறுதி தந்திருப்பதாகவும் அறியக்கிடக்கிறது.

ஆனால், பம்பாய் ஆலை அரசரான ஷாப்போ, ஆலைகளுக்கு வேண்டிய மூலதனத்தை இலங்கை பொது மக்களிடமிருந்தே பெறுவதென்றும், அங்குள்ள தொழிலாளர்களின் உழைப்பை உபயோகித்துக் கொள்ளுவதென்றும். சில நிபுணர்களை மட்டும் இந்தியாவில் இருந்து கூட்டிப் போவது என்றும் கருதுவதாக நம்பப்படுகிறது.

துவக்க நினைக்கின்ற ஆலைகளுக்குத் தேவையான மூலதனத்தை இலங்கையில் இருந்து மட்டுமே திரட்டுவது கஷ்டமாக இருக்குமானல், இந்தியாவில் இருக்கும் மூலதனம் திரட்டும் முயற்சி பின்னுல் நடைபெறக் கூடும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

வெளிநாட்டு மூலதனத்தை வரவேற்கத் தயாராக இருப்பதாக டில்லிவந்திருக்க கொத்தலாவலை ஏற்கெனவே கூறி இருப்பது குறிப்பிடத் தக்

(4-ம் பக்கம் பார்க்க)

கண்ணதாசன்—தர்மலிங்கம் ஜாமீனில் விடுதலை

திருச்சி, பிப். 9—

கல்லக்குடி அறப் போராட்ட வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களில் தோழர்கள் கண்ணதாசன், அம்பில் - தர்மலிங்கம், தம்புசமி, ராதாகிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன், திருமலை ஆகியோர் இன்று ஜாமீனில் விடுதலையடைந்தனர்.

ஆபத்து நெருங்குகிறது!

லாவோஸ் தலைநகருக்கு அருகில் வியட்மின் படைகள்

பாரிஸ் பிப். 9—

இந்தோ-சீனுவில், லாவோஸ் தலைநகரான லுவாங்பிரபாங்குக்கு 6 மைல் தூரத்தில் வியட்மின் படைகள் வந்துவிட்டனவாம்.

திராவிட
மாணவர் முன்னேற்றக் கழக
தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்பு

12—2—54 வெள்ளி மாலை 5-30 மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்
★
தலைவர்: கே. மனோகரன்
★
பொதுச்செயலாளர் அண்ணுதுரை,
ஈ. வெ. கி. சம்பத் | மு. கருணாநிதி
இரா. நெடுஞ்செழியன் | என். வி. நடராசன்
அ. பொன்னம்பலனர் | கே. அ. மதியழகன்
ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.
★
நன்கொடை: அணு எட்டு
—சென்னை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்.

நம் நாடு
ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 10—2—1954 புதன்

கவர்னரான ராஜா!

சென்னை மாநில முன்னாள் முதலமைச்சர் ராஜபாளையம் குமாரசாமி ராஜா அவர்கள், ஒரிசா மாநிலத்தின் கவர்னராக்கப்பட்டு இருக்கிறார். இன்று முதல் கவர்னராகவும் பணி புரியத் தொடங்கிவிட்டார். அவர் கவர்னராக்கப்பட்டது 'தமிழர்களுக்கே பெருமை' எனக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தசிலர் பூரிப்படைவதில் ஆச்சரியமொன்றுமில்லை அது அவர்களுடைய நீங்காக் கடமை என்பது நமக்குத் தெரியும். எனவே, அவர்கள் பாராட்டைக் கண்டு எவரும் காழ்ப்பு கொள்ளமாட்டார்கள்.

ஒரு தமிழர், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர், வட நாட்டில் உள்ள ஒரு மாநிலத்தின் கவர்னராகப் பதவி பெறுகிறார் என்றச் செய்தி, அந்தச் செய்தி எவ்வளவு பற்றுதலோடும், பாசத்தோடும், பரிவோடும் காங்கிரஸ் கட்சியினரால் வரவேற்கப்பட வேண்டுமோ, அந்த அளவில் காங்கிரஸ் கட்சியிலுள்ள அனைவராலும் வரவேற்கப்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டிலே பிறந்த ஒருதமிழர், அதிலும் காங்கிரஸ் கட்சியினர், ஊர் பெயர் தெரியாத ஒரு காங்கிரஸ் கட்சியினராக இல்லாமல், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் பட்டியலிலிருந்து காங்கிரசுக்குச் சேவை செய்தவர், அதிலும் காங்கிரஸ் சர்க்காரின் பிரதமராக இருந்து மாநிலத்தை ஆட்சி செய்தவர், அதிலும் அவ்வப்பொழுது காங்கிரஸ் இட்ட கட்டளைக்கெல்லாம்—அடங்காப் பிடாரியாக இல்லாமல்—தலை வணங்கித் தியாகத் தழும்பேறியவர், நாணயமானவர், தன்னடக்கம் மிக்கவர், நாவடக்கம் கற்றவர் ஆகிய சிறப்பியல்புகள் கொண்ட ராஜபாளையத்தார் கவர்னராக்கப்பட்டச் செய்தி காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக உள்ள ஒவ்வொருவருக்கும், இதய பூரிப்பளிக்கும் இன்பச் செய்தியாக இருக்க வேண்டியதுதான் முறையாகும். மாற்றுக் கட்சியினர் மட்டுமல்லாமல், அரசியல் கட்சி எதிலும் கலவாத சாதாரண மக்களும்கூட, இதைத்தான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அனைவரிடமும் எதிர்பார்ப்பர்.

ஆனால், ராஜா கவர்னராக்கப்பட்டதை, காங்கிரஸ் கட்சியினர் அனைவருமே—மனந்திறந்து இல்லையானாலும்—ஊரார் ஒப்புக்காகவாவது வெளிப்படையாகவாவது வரவேற்று தங்களுடைய மகிழ்ச்சியைக் காட்டிக்கொண்டார்களா என்றால், அப்படி ஒன்றும் உறுதியாகக் கூறுவதற்கில்லை. திருடனைத் தேள் கொட்டினது போலவும், கருவுற்ற கைம்பெண் போலவுமே சில பல காங்கிரஸ் கட்சியினர் இருந்து வருவதை நாம் காண்கிறோம். ஏன் ராஜா பெற்ற கவர்னர் பதவி, அந்தச் சில பல காங்கிரஸ் கட்சியினருக்கு மகிழ்வூட்டும் செய்தியாக இல்லாதிருக்கிறது என்பது சிந்திக்கத்தக்க விஷயமாகும். அவ்வாறு சிந்திப்பதினாலும், ஆராய்ந்து பார்ப்பதினாலும் கிடைக்கப்பெறுகிற உண்மை இருக்கிறதே, அது மிகமிக மகத்தானதாகும். மறைந்து கிடக்கும் அந்தச் சிறந்த உண்மையில்தான் தமிழ் நாட்டு மத, சமுதாய, பொருளாதார, அரசியல் கட்டுக்கோப்பு இணைந்து கிடக்கிறது. அதை மக்கள் விளக்கமாகத் தெரிந்து கொண்டால்தான், நாட்டில் நடைபெறும் பல பொது நிகழ்ச்சிகள் தோன்றுவதற்கும், ஆக்கம் அடைவதற்குமான அடிப்படையைச் சிக்கறத் தெரிந்துகொள்ளுவது நம் அனைவருக்கும் சாத்தியமாகும்.

குமாரசாமி ராஜா அவர்கள் கவர்னராக்கப்படுவதற்கு முன்னால் வேறு இரு தமிழ்நாட்டவர் கவர்னர்களாக ஆக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த இரு சம்பவத்தையும் பிறவிக் குருடன் கண் பெற்றது போல், மிகைபடப் பாராட்டி வரவேற்று, காங்கிரஸ் ஏடுகள் என்று சொல்லிக்கொள்ளுகின்ற தங்கள் ஏடுகளில், பலப் பல எழுதினர், 'புனித'மான அந்தக் காங்கிரஸ்காரர்கள்! அந்த இரு கனவான்களின் புகைப்படங்களையும் சிறப்பான இடங்களில் போட்டு விளம்பரப்படுத்தினர், அந்தக் காங்கிரஸ் 'தியாகக் குன்று'கள்!

இந்த நல்லப் போக்கைத்தான், ராஜா கவர்னராக்கப்பட்ட விஷயத்திலும் குறிப்பிட்ட அந்த நல்லவர்கள் கடைப்பிடித்திருக்க வேண்டும்; அதுவே நேர்மை, நியாயம் என்று மக்கள் எதிர்பார்க்கத்தான் பார்ப்பர்!

அனைவரும் எதிர்பார்க்கும் இப்பொதுமுறையை, இந்தச் சில பல காங்கிரஸ் கட்சியினர் மேற்கொண்டு ஒழுக முன்வரவில்லை. அதாவது, அந்த நாள் கவர்னர் ஆன இரு கனவான்களைப் பாராட்டினதுபோல, இந்த நாளில கவர்னரான ராஜாவைப் பாராட்ட அவர்கள் முன்வரவில்லை. வேறு எவரோ ஒரு நாட்டுக்குதவாத மாற்றுக் கட்சியினர் கவர்னரானால், அந்தச் செய்தி எப்படி அவர்களுக்கு அலட்சியத்தையும், அதிருப்தியையும் உண்டாக்கி இருக்குமோ, அதே நிலையைத்தான், ராஜா விஷயம் அவர்களுக்கு மூட்டி இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ராஜாவின் நியமனம் அந்தச் சில பல காங்கிரஸ் கட்சியினருக்குக் கசப்பாகக்கூட இருக்கிறது என்று சொன்னாலும் அது பொருந்தக் கூடியதேயாகும்.

ராஜபாளையம் ராஜா சென்ற பொதுத் தேர்தலில் நின்று பொதுமக்கள் ஆதரவு பெற்றவர்; பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை ஒரு மாநிலத்தின் கவர்னராக நியமிப்பது ஏற்புடையதாகும்; ஆனால், அவரை கவர்னராக்க யூனியன் சர்க்கார் போவது அதர்மமாகும்; எனவே, அக்கிரமமாக உயர்பதவி பெற்ற ராஜாவை அவர்களால் பாராட்ட முடியவில்லை என்று, அவர்களுடைய பேசாமடந்தைத்தனத்துக்கு, நாம் காரணம் கூறலாமோ என்றால், அவர்களுடைய முற்காலப் போக்கு அதைப் பொய்யாக்கிவிடும். அதாவது, ராஜாவாவது இருபது ஓட்டுகளுக்குள்ளாகத்தான் குறைவாகப் பெற்று தேர்தலில் தோற்றுப் போனார். இதனால், பொதுமக்கள் ஆதரவு கணிசமாக ராஜாவிற்கு இல்லாமல் போய்விட்டது என்று சொல்லுவதற்கில்லை. சட்டசபை உறுப்பினராவதற்கான அளவு வாக்குகள்தான் அவர் பெறவில்லையே அல்லாமல், பெரும்பாலான மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக அவர் அப்பொழுதும் இருந்தார் என்ற உண்மையைத்தான் அத்தேர்தல் காட்டிற்று.

முன்னாள் கவர்னராக்கப்பட்ட சந்தானம் அய்யங்காரும் பார்லிமெண்டு தேர்தலுக்கு நின்று தோற்றுப் போனவர்தான். தோல்வியும் சாதாரணமானது அல்ல. ஆயிரக்கணக்கிலே மக்கள் அவரைத் தோல்வியுறச் செய்தனர்.

இப்பொழுது ராஜாவைச் சிறப்பிக்க முன்வராத் தயக்கம் காட்டும், அந்தச் சில பல காங்கிரஸ்காரர்கள கச்சையை வரிந்துக் கட்டிக்கொண்டு, பதவிபெற்ற சந்தானத்திற்குப் பூரண கும்பமெடுத்தனர். அவர்களை ஆசிரியராகக்கொண்ட அசல் காங்கிரஸ் ஏடுகள் அய்யங்காரையும், அவர் பெற்ற பதவியையும் பேனா முனை மழுங்கப் புகழ்ந்து எழுதின! எனவே, தேர்தலில் தோற்றவரை கவர்னராக யூனியன் சர்க்கார் நியமித்திருப்பது தவறு என்பதற்காகத்தான், ராஜாவின் நியமனத்தை அந்தச் சில பல காங்கிரஸ்காரர்கள் பாராட்ட முன்வரவில்லை என்று சொல்லுவதற்கு இடமில்லை. ஆனால், தோற்றும் பதவி பெற்ற சந்தானம் அய்யங்காரைப் பாராட்டின அதே சில பல காங்கிரஸ் கட்சியினர், தேர்தலில் தோற்றுப்போய் கவர்னர் பதவி பெற்றுள்ள ராஜாவைப் புகழுவதில் பின்னடைந்திருக்கிறார்கள்! அவர்கள் கொண்டுள்ள தயக்கத்திற்கு என்ன காரணம்? ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று நியாய புத்தி படைத்த நாட்டு மக்களை வேண்டிக்கொள்கிறோம்.

சந்தானம் அய்யங்காரைப் போலவே, ராஜாவும் காங்கிரஸ் கட்சியினர்தான். அவர் யூனியன் சர்க்காரில் துணை மந்திரியாக இருந்தது போலத்தான், ராஜாவும் சென்னை சர்க்காரின் முதல் அமைச்சராக இருந்திருக்கிறார். கூற வேண்டுமானால் அய்யங்காரைவிட எல்லா வகையிலும், ராஜா சிறந்தவரே ஒழிய, லவலேசமும் குறைந்தவரல்ல. ஆகவே, சில பல காங்கிரஸ்காரர்களின் பாராட்டுதலைப் பெற இருவருக்கும் ஒரேவகையான உரிமைதான் இருக்கிறது.

காங்கிரஸ் கட்சியினர் கவர்னராகிறார் என்று அய்யங்காருக்கு அதிகமான விளம்பரம் கொடுத்து எழுதினவர்கள், அவரைப் போன்றே ஒரு காங்கிரஸ்காரரான ராஜா பதவி பெற்ற விஷயத்தை நியாயமான முறையில விளம்பரம் செய்யாமல் ஏன் விட்டார்கள்? கவர்னர் பதவி பெற்ற இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், இருவர் நியமனத்தையும ஒரேமாதிரியில் மதித்து, இருவரையும் ஒரே மாதிரியாகப் பாராட்டுவதைத்தான், காங்கிரஸ் கட்சியில் உள்ள அனைவரிடமும் மக்கள் எதிர்பார்ப்பர். ஆனால், நடந்திருப்பதோ இதற்கு நேர்மாற்றமாக இருக்கிறது. இந்த நேர்மாற்றமான நடவடிக்கைக்கு எது காரணம்?

குறிப்பிடத்தகுந்த சில பல காங்கிரஸ்காரர்கள், அய்யங்கார் நியமனத்தைக் கண்டு பூரிப்பு கொண்டதற்கும், ராஜாவின் நியமனத்தில் மகிழ்ச்சி காணாததற்கும், காங்கிரசைத் தவிர்த்து அவர்கள் மதித்து வரும் பண்பு வேறு ஏதுவோ இருக்கிறதாக, அவர்கள் நம்பி இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அவர்கள், அய்யங்காரைப் போற்றுவதற்காகக் கொண்டுள்ள கோட்பாட்டிற்கு, காங்கிரஸ் கட்சிக்குக் கொடுக்கும் மதிப்பைக் காட்டிலும், கூடுதலான மதிப்பை, அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்ற உண்மை தெளிவாகிறது.

அந்தச் சில பல காங்கிரஸ்காரர்கள், தங்களையும் காங்கிரஸ் கட்சியினர் என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டபோதிலும், அவர்கள், காங்கிரசுக்குக் காட்டிவரும் மதிப்பைக் காட்டிலும், வேறு ஒரு கோட்பாட்டில் அல்லது கொள்கையில், அதிகமான மதிப்பை வைத்திருக்கிறார்கள் என்ற உண்மை ஐயத்திற்கிடமின்றி அம்பலமாகிறது.

தங்களையும் காங்கிரஸ் கட்சியினர் என்று அவர்கள் கூறிக்கொள்ளுவது ஒரு பக்கம் இருக்கட்டும். அவசியம் நேருமானால், தங்களைத் தமிழர்கள் என்று அவர்கள் கூறிக்கொள்ளவும் தயங்குவது கிடையாது. அப்படி அவர்கள் கூறிக்கொள்ளுவதிலும் ஏதாவது உண்மை இருக்கிறதாக இருந்தால், தங்கள் இனத் தமிழர் என்ற முறையிலாவது ராஜாவின் நியமனத்தை அவர்கள் இரு கையேந்தி வரவேற்க முன்வந்திருக்க வேண்டும். இது விஷயத்திலும், தாங்களும் தமிழர்கள்தான் என்று மெய்ப்பித்துக்கொள்ள அவர்கள் மனமொப்பவில்லை. இதிலிருந்து பெறப்படும் உண்மை யாது?

அவர்கள், தமிழ்மொழியிடத்தில் கொண்டுள்ள பாசத்தைக் காட்டிலும், வேறு எந்த ஒன்றிடத்திலோ அதிகமான பற்றுதலைக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையைத்தான் இது வலியுறுத்துகிறது.

பேசும் மொழி உண்டாக்கும் உறவைக்கூட மறந்துவிடுவோம். தமிழ் நாட்டவர் என்றுதான் அவர்கள் தங்களையும் கூறி பெருமைப்படுவதாகக் காட்டிக் கொள்கிறார்கள் இந்த நாட்டுத் தொடர்பையாவது பொறுத்தாவது, அவர்கள் ராஜாவை தமிழ் நாட்டுக்காரர் என்று கொண்டு, அவர் நியமனத்தைக் கண்டு உள்ளம் குளிர்ந்திருக்க வேண்டும். நாட்டினால் ஏற்படும் நட்புரிமைக்கும் முரண்பட்டுக் காணப்படுகிறது, அவர்கள் செயல்! இந்த முரண்பாட்டிற்கு எது காரணம்?

நாட்டுப்பற்றிடத்தில் அவர்கள் வைத்திருப்பதாகச் சொல்லப்படும் மதிப்பைக் காட்டிலும், பல மடங்குக் கூடுதலான மதிப்பை, அவர்கள், வேறு 'சிறந்த கோட்பாட்'டின்மீது வைத்திருக்கிறார்கள் என்பதைத்தான் இதுவும் திட்டவட்டமாக உறுதிப்படுத்துகிறது.

காங்கிரஸ், மொழி, நாடு, ஆகிய இம்மூன்றிற்கும் தாங்கள் கொடுத்திருக்கும் மதிப்பைக் காட்டிலும், அந்தச் சில பல காங்கிரஸ்காரர்கள், வேறு எந்த ஒன்றிடமோ உயிரினும் உயர்வாக மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்ற உண்மை, இதுவரை எடுத்துக் காட்டி வந்துள்ளவைகளால் ஒருவாறு விளங்கி இருக்குமென்றே நம்புகிறோம்.

அதுதான் 'ஜாதி!' அந்தப் பாசந்தான் அய்யங்காரைப் பாராட்டும்படியும், ராஜா விஷயத்தில் அலட்சியமாகவும் அதிருப்தியோடும் நடந்து கொள்ளும்படியும், அவர்களுக்கு ஊக்கமூட்டியது!

இந்த ஜாதிச் சனியனுக்கு முன்னால் காங்கிரஸ், மொழி, நாடு ஆகிய அனைத்தும், குறிப்பிட்ட அவர்களிடம், ஞாயிறுபட்ட பனிபோல் மறைந்தொழிவதை நாட்டு மக்கள் சிந்திக்க வேண்டுகிறோம்.

இந்த 'ஜாதி', சனாதன தர்மத்தின் ஒரு கூறு! இதைக் காக்கக் கங்கணம் கட்டி நிற்பவர்கள்தான் கடைந்தெடுத்த 'வகுப்புவாதிகள்' என்ற பட்டத்தைச் சுமந்து திரியவேண்டியவர்கள். ஆனால், அந்தப் பட்டத்தை 'ஜாதி' தொலையப் பாடுபடும் நம்மீது வீசி எறியப்படும் வேதனை தரும் காட்சி இங்கு இருந்து வருகிறது. அதுவும் முதல்தர பரம்பரை 'வகுப்பு வாதிகள்' தேசியப் போர்வையில் புகுந்து கொண்டு செய்யப்பட்டு வரும் வரைகடந்த அக்கிரமமாகும்! என்று தொலையுமோ இந்த அறுவறுக்கத் தகுந்த நிலை — நடைமுறை. நிற்க,

இராஜபாளையம் குமாரசாமி ராஜா அவர்கள், கவர்னராவதற்கு வேண்டப்படும் தகுதிகள் அனைத்தும் பெற்றிருப்பவர் என்பதில் நமக்குத் துளியும் சந்தேகமில்லை. தகுதி வாய்ந்த ஒருவருக்குக் கவர்னர் பதவி கிடைத்திருப்பதிலும் ஆச்சரியமொன்றும் இல்லை.

ஆற்றலும், அனுபவமும் பெற்றுள்ள அவர், திராவிட சமதர்மக் குடியாட்சியில் சிறப்புக்குரிய ஒரு தலைவராவதுதான், நமக்கு மகிழ்வூட்டும் செய்தியாக இருக்க முடியுமேயல்லாது, வட நாட்டு ஏகாதிபத்தியத்தைக் கட்டிக் காக்க அவர் கவர்னராகும் செய்தி—நமது சிற்றத்தை வேண்டுமானால் கிளறத் தவறலாம்—கண்டிப்பாக நமக்குக் களிப்பளிக்கக் கூடியதாக இருக்க முடியாது. தென்னிலங்கை வேந்தனைப் பாராட்டிய வாய், விபீஷணனைப் பாராட்ட ஒருப்படுமா?

அவருடைய புதிய நியமனம் நமக்குப் பூரிப்பளிக்கவில்லையே ஒழிய, கவர்னர் பதவிக்கான அறிவாற்றல் ராஜாவிடம் அமோகமாக உள்ளது என்பதை நாம் என்றும் குறைத்து மதிப்பிட மாட்டோம். குணம் எங்கு இருந்தாலும், அதை ஏற்று மகிழும் பெரும் புத்தி நமக்கு என்றும் உண்டு என்று எடுத்துக் கூறி இதை முடிக்கிறோம்.

அரிசி சேமிப்பில் இந்தியாவின் நிலைமை!

பர்மாவிடம் மீண்டும் பேச்சு வார்த்தை

புதுடில்லி, பிப். 10—

இந்தியா, தன் கைவசம் சேமிப்பாக வைத்துக் கொள்வதற்காக பர்மாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யலாம் எனத் தெரிகிறது. இது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் இரு தரப்பினரிடையே சீக்கிரம் ஆரம்பமாகும்.

இப்போது அரிசி விஷயத்தில் சுயதேவை பூர்த்தி ஏற்பட்டிருந்த போதிலும், அரிசிப் பங்கீட்டை அடியோடு ஒழித்துவிட 10 லட்சம் டன்களாவது சேமிப்பு இருக்கவேண்டியிருக்கிறதென்றும், இப்போதுள்ள சேமிப்பு 4 லட்சத்து 50 ஆயிரம் டன்கள் தான் என்றும் உணவு இலாகா அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்திய உணவு மந்திரி அதிக விலை கொடுத்து அரிசியை இந்தியா வெளிநாடுகளில் வாங்காது என்று சொன்னதால், அயல் நாடுகளிலிருந்து அரிசி வாங்க முயற்சிகளே செய்யப்பட மாட்டாதென்று அர்த்தமில்லை என்று எடுத்துக் காட்டப்படுகிறது. சர்க்கார் நியாயமான விலைக்கே அரிசியைப் பெற முயல்கிறது.

சென்ற ஆண்டில், பர்மா, ஒரு டன் அரிசிக்கு 50 பவுன் கேட்டது; இந்தியா 40 பவுன் தர தயாராக இருந்தது; இப்போது இந்தியா 40 பவுனுக்கு மேல் கொஞ்சம் அதிகமாக தரச் சம்மதிக்கலாம்.

பர்மாவிடம் உபரியாக 15 லட்சம் டன் அரிசி இருக்கிறது.

பற்றாக்குறைப் பிரதேசங்களுக்கு உணவுத் தானியங்கள்

புதுடில்லி, பிப். 9—

ஜனவரி 31ந் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், மத்திய உணவு—விவசாய மந்திரி காரியாலயம், நாட்டிலுள்ள பல்வேறு பற்றாக்குறைப் பிரதேசங்களுக்கும் மொத்தம் 51,250 டன் உணவுத் தானியத்தை அனுப்பியிருக்கிறது.

இதில் பிரதானமாக திருவாங்கூர்—கொச்சிக்கு 26,700 டன்னும், பம்பாய்க்கு 5,500 டன்னும், மேற்கு வங்காளத்துக்கு 3,550 டன்னும், அஸ்ஸாமுக்கு 1,300 டன்னும் கிடைத்தன. இதர எல்லாப் பிரதேசங்களுக்கும் மொத்தம் 14,200 டன் கிடைத்தது.

வருகை மேல் வருகை!

பம்பாய், பிப். 10—

அமெரிக்கப் பாங்கர்கள் மூவர் கொண்ட குழு இங்கு வந்து வியாபாரிகள், கைத்தொழில் முதலாளிகள் ஆகியவர்களைச் சந்தித்துப் பேசி வருவதாகத் தெரிகிறது. இப்பேச்சு வார்த்தைகளினால் உருப்படியான உதவி கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

* * *

கல்கத்தா, பிப். 10—

இந்தியத் தொழில்களில், பிரிட்டிஷ் அனுபவங்களைக் கொண்டு இயந்திர வசதிகளை அதிகமாக்குவதில் முனைந்துள்ளனர். இது சம்பந்தமாக சில பிரிட்டிஷ் டெக்னிஷியர்கள் ஆலோசனை கூறுவதற்காக இந்தியாவிற்கு வரவிருக்கின்றனர்.

* * *

லண்டன், பிப். 10—

ஆசிய நாடுகளுடன் நெருங்கிய உறவு ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் கனடா பிரதம மந்திரி செயின்ட் லாரெண்ட் பம்பாய், சென்னை, ஆக்ரா, பெஷாவர், லாகூர் ஆகிய நகரங்களுக்கு வருகிறார். அவர் பிரதமர் பண்டித நேருவின் விருந்தினராகத் தங்கியிருப்பார்.

கழகச் செய்திகள்

விளாப்பாக்கம் தி. மு. கழகம்

2-வது ஆண்டு விழாவும், பொங்கல் விழாவும்

வட ஆற்காடு மாவட்டம் விளாப்பாக்கம் தி. மு. கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும், பொங்கல் விழாவும் 8—2—54 இரவு 7 மணிக்கு தோப்புக்குப் பக்கமுள்ள திறந்த வெளியில் தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரையாக தி. மு. கழகக் கொள்கைகள் நாடு முழுவதும் பரவி, வளர்ந்து வரும் நிலைமையை விளக்கியும், ஆச்சாரியார் கல்வித் திட்டத்தினால் ஏற்படும் கேடுகள் பற்றியும், அடக்கு முறைக் கொடுமைகள் பற்றியும் விளக்கிப் பேசினார்.

தோழர்கள் திருத்தணி என். ஏ. ரஷீத், அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் திருத்தணிப் போராட்டமும்—தி. மு. கழகமும், சமூக அரசியல், பொருளாதாரத்தில் திராவிட மக்களின் இன்றைய நிலைமைகள் பற்றி விரிவுரையாற்றினார்கள். தலைவர் முடிவுரை கூற, செயலாளர் நன்றி கூறலுடன் இரவு 10 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

தி. மு. கழகத் தோழர்களால் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தீட்டிய 'காதல் ஜோதி' நாடகம் சிறப்பாக நடத்திக் காட்டப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு மகிழ்ந்தார்கள்.

குறிப்பு:—தூத்துக்குடி நிதிக்கு முன்னரே ரூ 30 கொடுத்து விட்டதாகவும் மேற்கொண்டு வசூல் செய்து அனுப்புவதாகக் கூறினர்.

போத்தனூர் தி.மு.கழகம்

சேலம், பிப் 9—

4—2—54-ல் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கலெக்டர் அவர்களுக்கும், மத்திய போக்குவரத்து நிலையத்திற்கும் அனுப்பப்பட்டது.

சேலம் மாவட்டம் நாமக்கல் வட்ட தென்பகுதியிலும், போத்தனூர், பரண்டமங்கலம், வேலூர் மற்றும் பல சிற்றூர்களிலும் வெற்றிலைத் தொழிலையே நம்பி வாழ்ந்த பெருவாரியான மக்கள் வெற்றிலை தோட்டங்கள் பூச்சிகளால் பாதிக்கப்பட்டதால் அம்மக்களுக்கு அரசாங்கம் கஞ்சித் தொட்டிகள் திறக்கவும், மேற்கொண்டு அத்தொழிலை அவர்கள் நடத்த கடன் கொடுத்து உதவவும் அரசாங்கத்தைக் கோரியும், வேலூர்—புகலூர் காவேரிப்பாக்கம் பாலம் திறந்து இரண்டு ஆண்டுகளாகியும் மின்சார விளக்கு இல்லாததால், அப்பாலத்திற்கு மின்சார விளக்கும், போக்குவரத்துக்கு பஸ் வசதியும் செய்து தரவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆரப்பாளையம் தி. மு. கழகம்

31—1—54ல், செயற்குழுக் கூட்டம் தோழர் அ. வெள்ளை தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் ஆர். சுயம்பு உள்பட 12 பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும்; துரைராஜ், காசி விஸ்வநாதன் செயலாளர்களாகவும், பி. எஸ். கண்ணு பொருளாளராகவும், ரா. சு. செல்லம். இளம்பூரன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் கண்ணதாசன் குழுவினருக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருப்புக்குழி-பாலசெட்டி சத்திரம் தி. மு. கழகம்

22—1—54 மாலை 6 மணிக்கு, கழக அலுவலகத்தில் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. அது சமயம் கீழ்க்கண்ட குழு தேர்ந்தெடுக்கப்பட்டது:—செயலாளர்—ஜி. பழனி; துணைச்செயலாளர்—எ. சபாபதி; பொருளாளர்—ஆர் கிருஷ்ணன்; மாவட்டப்பிரதிநிதி—பி சந்திரமுனி; செயற்குழு உறுப்பினர்கள்:—பி சந்திரமுனி, எம். ஆர். முனுசாமி, டி. கே தங்கவேலு, கே. ரங்கநாதன், டி பி ஆதிகேசவன், ஆர் முனுசாமி வெ. செல்வராஜ், டி. கே. நரசிம்மன், ஜி சபாபதி, ஆர். கணபதி, என். கிருஷ்ணன், எ. ஜாபர், வ. கண்ணன், டி. எம். சுப்ரமணியம், பொன்னுசாமி, துரைசாமி ஆகியோர்.

—o—

குனியமுத்தூர் தி. மு. க.

31—1—54 இரவு 9 மணியளவில் உறுப்பினர்கள் கூட்டம் தோழர் கே. எ. பி. முத்து தலைமையில் நடைபெற்றது. புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தோழர்கள் தங்கமாணிக்கம் — செயலாளர், இரா.கருப்பண்ணன்-துணைச் செயலாளர்; அ. கிருஷ்ணன்—பொருளாளர்; க. இராமு—மாவட்டப் பிரதிநிதி; செயற்குழு உறுப்பினர்கள்-தோழர்கள் ஒவ்வர் கி. திருவேங்கடம், ஆர். குப்புராஜு, இரா இலட்சுமணன், வெ. கருப்புசாமி, இரா. கருப்பண்ணன. சி. அய்யாசாமி, இரா. வெங்கடாசலம் ஆகியோர்.

தோழர் கண்ணதாசன் குழுவினரின் தண்டனையைக் கண்டித்தும், அவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், மார்ச் மாதத்தில் கழக ஆண்டு விழாவை தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி ஆகியோரைக் கொண்டு நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நிலக்கோட்டை தி. மு. கழகம்

வட்டாரக் குழு அமைப்பு

30—1—54ல், அழகிரி அரங்கில் (நிலக்கோட்டை தாலுகா) தி. மு. கழக வட்டாரக் குழு கூட்டம் தோழர் இ காத்தான தலைமையில் நடைபெற்றது. வட்டாரக் குழுச் செயலாளர்: இ காத்தான்; துணைச் செயலாளர்: ஆவுடையப்பன்; பொருளாளர்: வெங்கிடுசாமி; விளம்பர உறுப்பினர். எஸ். மீனாட்சிசுந்தரம்; துணை விளம்பர உறுப்பினர்: சையது இப்ராஹிம்; ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

அன்று இரவு 10 மணிக்கு பாண்டியனார் நினைவுப் படிப்பக நிதிக்காக மேற்படி அரங்கில், தோழர் மு கருணாநிதி தலைமையில் பி. எஸ். செல்வா, கலைத்தன் குழுவினரின் "நாவரசன்" என்ற சீர்திருத்த நாடகம் நடைபெற்றது. நாடக முடிவில் மு கருணாநிதி அவர்களுக்கு கருப்பு மாலை அணிவித்து கல்லக்குடி, கல்லக்குடி நிதிக்காக பண முடிப்பு கொடுக்கப்பட்டது.

புதுக்கோட்டை தி. மு. கழகம்

3—2—54 அன்று, தோழர் ஜி. லக்கையன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், இயக்க இளைஞர்கள் நடத்தும் நாடக அரங்கிற்கு 'மறுமலர்ச்சி நாடக மன்றம்,' என்று பெயரிட்டும், 'டணம் செய்யுங் கொலை' என்னும் நாடகத்தை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பெங்களூருக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை வருகை

★

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் 28-2-54-ல் பெங்களூர் வருவதற்கில்லை. 14-3 54-ல் பெங்களூர் வர இசைந்திருக்கிறார். அன்று மாலை பொதுக் கூட்டத்தில் தூத்துக்குடி நிதிக்கு பண முடிப்பு ஒன்று அளிக்கப்படும் என்று, பெங்களூர் தி. மு. கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

தென்னார்க்காடு மாவட்டத் தோழர்கட்கு

14-2-54-ல் நடைபெறும் ஐவர் வரவேற்புக் கூட்டத்தன்று காலை 10 மணி அளவில் தோழர் என். வி. நடராசன் தலைமையில் ஊர்வலமும், கொடியேற்று விழாவும் நடைபெறும்.

தென்னார்க்காடு மாவட்ட கிளைக் கழகத் தோழர்கள், கழகக் கொடிகளுடன் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கள்ளக்குறிச்சியில் இளைஞர் தி. மு. கழகம்

24—1—54 இரவு 9 மணிக்கு தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் இளைஞர் தி. மு. கழகம் அமைக்கப்பட்டது. கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: மு. பாண்டியன்; துணைச்செயலாளர்: கே. ஜி. இளஞ்சேரன்; பொருளாளர்: அ. விஜயராசன்; விளம்பர உறுப்பினர்கள்:— மா. தங்கப்பமம், செ நெடுமாறன்; மாவட்டப் பிரதிநிதி: ஆர். வி. கோபால்; செயற்குழு உறுப்பினர்கள்: இரா. தாமரை அரசு, மா. தங்கராசு, கோ. கரிகாலன், கே. ஜி. பொன்மொழியன், கே. காசி கோ. வடிவேலு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கிராண்ட்பாஸ் தி. மு. கழகக் கிளை

கொழும்பு, பிப். 8—

செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் செயலாளர் தலைமையில் கழக அலுவலகத்தில் நடைபெற்றபோது, டில்லி ஒப்பந்தத்தைக் கண்டித்தும், எம். என். ராய் மறைவுக்கு வருந்தி, அனுதாபம் தெரிவித்தும், தோழர் கண்ணதாசன் குழுவினரின் தண்டனையைக் கண்டித்து, அவர்களை விடுதலை செய்யக் கோரியும். கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை ஏப்ரல் மாதக் கடைசியில் முத்தமிழ் விழாவாக சிறப்பாக நடத்தவேண்டுமென செயலாளரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்செந்தூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

31—1—54ல், வ. உ. சி. திடலில், தோழர் சாகுல்ஹமீது தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். கந்தசாமி இன்றைய அரசியல் நிலைமை பற்றியும் அலிசேக் மன்சூர், 'புதிய கல்வித் திட்டம் திராவிடர்களுக்கு எவ்விதம் தீமை புரிகிறது?' என்பது பற்றியும், எஸ். எஸ். சிவசூரியன் தி. மு. கழகத்தின் 'சமுதாயத் தொண்டு' பற்றியும் சொற்பொழிவாற்றினர். கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தனர். தோழர் கண்ணதாசன் குழுவினரை விடுதலை செய்யக் கோரியும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை சுற்றுப் பயணம்

★

பிப். 14: தென்னார்க்காடு மாவட்டச் சார்பில், விழுப்புரத்தில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம்

" 15: சென்னையில்—திருமணம்

" 16 முதல் 19 வரையில்: தஞ்சை மாவட்டம்: நாகப்பட்டணம், கோரடாச்சேரி, குடவாசல், கும்பகோணம் ஆகிய இடங்களில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

" 21: மதுரை நகர் தி. மு. கழகப் பொதுக் கூட்டம். இரவு-நாடகம்

" 22: பட்டிவீரன்பட்டி மறைந்த மாவீரர் டபிள்யூ. பு. அ சௌந்திரபாண்டியன் அவர்கள் முதல் ஆண்டு நிறைவு விழா-இரவு நாடகம்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

" 28 முதல் மார்ச் 3 வரை சேலம் மாவட்டம் சுற்றுப் பிரயாணம்

தேனி தி. மு. கழகம்

செயற் குழு தேர்தல்

20—1—54-ல், கழக அலுவலகத்தில்: பொதுக்குழு கூட்டம் தோழர் ஆ கருப்பையா தலைமையில் கூடியது அது சமயம் புது ஆண்டுக்கு தோழர்கள் கே. காதர் மைதீன் செயலாளராகவும், கே. பி பி எம். நாராயணசாமி துணைச் செயலாளராகவும், சோ. வெற்றி அரசு பொருளாளராகவும், பொ. பு. துரைராசன் மாவட்ட உறுப்பினராகவும், என் என் ராசு, பரமசிவம், என். பால்ராசு, மாரிமுத்து, ஆ. கருப்பையா, குருசாமி, அய்யப்பன், செயராசன், மீனாட்சிநாதன் ஆகியோர் கமிட்டி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

* * *

அன்று மாலை 5 மணிக்கு செயலாளர் கே. காதர்மைதீன் தலைமையில் நிர்வாகக் கமிட்டி கூடி, மார்ச்சு மாதத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர் மு கருணாநிதி ஆகியவர்களை அழைத்துப் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், கூட்டத்தில் தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு ரூ 300-ம், அதற்கு மேற்பட்டுசெலவுகளையும் கொடுப்பதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

பரவை தாளமுத்து—நடராசன் நினைவுப் படிப்பகம்

2—2—54ல், நடைபெற்ற மேற்படி படிப்பக (தி. மு. கழக கிளை) உறுப்பினர்கள் கூட்டத்தில், புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: எஸ். இராமன்: செயலாளர்; எ இப்ராஹிம்: துணைச் செயலாளர்; இரா. சந்திரன்: பொருளாளர்; அ. குழந்தை: விளம்பர உறுப்பினர்; ப. கார்மேகம்: மாவட்டப் பிரதிநிதி; சி. அருணாசலம், ஆ. அய்யாச்சாமி, மு. பழனிவேல், சா. பிச்சை, மயில்வாகனம், மா. துரைப்பாண்டி ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர் தோழர் கண்ணதாசன் குழுவினருக்கு விதித்த தண்டனையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வாழ்க்கைத் துணை தேடும் 120 ஆண்டு இளைஞர்!

—(:)—

முதல் இரு மனைவியரும், ஐந்து பிள்ளைகளும் கல்லறையில்!

மருமகள்மீது கோபங்கொண்டதால், ரொட்டி சுட ஒருத்தி தேவையாம்!

ராஜ்கோட், பிப். 10—
தனது வயது 120 என்று அந்தக் கிழவன் கூறுகிறான்; 100 தான் இருக்கும் என்று கிழவனின் இரண்டாம் மனைவிக்குப் பிறந்த மகன் கூறுகிறான். கிழவன் கூறுவதற்கும் 10 வயது குறைவாக இருக்கக்கூடும் என்று மற்றவர்கள் கூறுகின்றனர்.

ராஜகோட்டிற்கு 30 கல் தொலைவில் 'கஜோதா' எனும் சிற்றூர் உள்ளது. அதில் வசிக்கும் அந்தக் கிழவனின் பெயர் சிமா கோகல் கோலி என்பதாகும்.

அவன் இரு மனைவியர்களை மணந்துகொண்டு இருந்தான்; அவனுக்குக் கொஞ்சம் நிலமும் உண்டு; அவன் ஒரு உழவன்.

முதல் மனைவிக்கு ஐந்து பிள்ளைகள்; இரண்டாம் மனைவி பெற்றெடுத்தது இரண்டு பிள்ளைகள்; இந்த இருவரில் மூத்தவன் வயது 60 ஆகிறது.

மொத்த நிலத்தில் சிறு பகுதியை தனக்கென வைத்துக்கொண்டு மற்றதை இரு பிள்ளைகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டான். இந்த பாகப் பிரிவினையில் ஏற்பட்ட சிக்கலை தீர்த்துக்கொள்ள பிள்ளைகளுக்கு எதிராக கிழவன் நீதிமன்றம் ஏறினான்.

அவனுக்குக் காதோ செவிடு; கண்பார்வையோ மங்கல்; இருந்தாலும், தனக்கென்று ஒதுக்கிக் கொண்ட நிலத்தில், உழைத்தே கிழவன் பாடுபடுகிறான்.

மருமகள் தன்னை நன்கு உபசரிப்பது கிடையாது என்பது கிழவனின் குறைபாடு. எனவே, தனக்குச் சுவையான ரொட்டி சுட்டுக்கொடுக்கவும், வாசனையுள்ள செய்யுப் உணக்கிக் கொடுக்கவும், மூன்றாவதாக ஒருத்தியை மணந்துகொள்ள அவன் முயலுகிறான்.

இனிமேலும், தனக்கும், வரப்போகும் மனைவிக்கும் குழந்தைகள் பிறக்கும் என்றும், தன் கைவசமுள்ள உழு நிலத்தை அக்குழந்தைகளுக்கு உரிமையாக்குவது என்றும் கிழவன் கருதிக்கொண்டு இருக்கிறான். சொத்துடையவன் சுகம் தேடுகிறான் சொத்துக்கு ஆசைப்பட்ட ஒருத்தி கிடைக்காமலா போவாள் கிழவனுக்கு வாழ்க்கைப்பட! பலே சிமா! பலே!

முன்னோடியின் புகழ் மாலை!

புதுடில்லி, பிப். 10—
ஆச்சாரியாரின் எதிர்காலம் குறித்து ஏராளமான வதந்திகள் உலவுவது பற்றி, சென்னை நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் இங்கு பேசுகையில், ஆச்சாரியார் தற்போது பதவியிலிருந்து விலகுவதாக உத்தேசமில்லை யென்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், ஆச்சாரியாரின் தலைமையினால் தான் ஏராளமான பிரச்சினைகள் தீர்ந்துவிட்டதாகச் சொன்னார்.

சோவியத் ஸ்தானிகர் சென்னை வருகை

சென்னை, பிப் 9—
புதுடில்லியிலுள்ள சோவித் ஸ்தானிகர் மென்ஷிகோவ் ரஷ்ய கலாசார தூதுகோஷ்டியுடன் பிப்ரவரி 16-ந் தேதி சென்னை வருகிறார். பிப்ரவரி 20-ந் தேதி வரை கவர்னரின் விருந்தினராக அவர் தங்குவார்.

கல்லூரி ஆசிரியர்கள் சம்பளம்

உயர்த்தப்பட வேண்டும் என சிபார்சு

மத்தியக் கல்வி ஆலோசனை போர்டின் முடிவுகள்

புதுடில்லி, பிப். 10—
மத்திய கல்வி ஆலோசனை போர்டு கூட்டம் நேற்று முடிவடைந்தது. மாணவர்களிடையே கட்டுப்பாட்டை நல்ல முறையில் ஏற்படுத்துவது பற்றியும், சர்வகலாசாலைக் கல்வியைத் திருத்தியமைப்பது பற்றியும் சிபார்சுகள் செய்யப்பட்டன.

சர்வகலாசாலை கல்விக் குழு செய்துள்ள சிபார்சை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

துணைவேந்தர்கள் நியமனம் பற்றி ஒரு நிச்சயமான முறை ஏற்படுத்துவது பற்றியும், செனேட் அல்லது கவுன்சிலில் மூன்றில் இரு பங்கு ஆசிரியர்களே உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று சிபார்சு செய்துள்ளது.

"தற்பொழுது மத்திய சர்வகலாசாலைகளில் இருந்து வருவது போல ஒரு மாநில சர்க்காரின் தலைவர், அந்த மாநில சர்வகலாசாலைக்கு பதவி காரணமாக சான்சலராக இருக்கக்கூடாது."

"ஒவ்வொரு சர்வகலாசாலையிலும் தகுதியுள்ள ஏழை மாணவர்களுக்கு ரூ 100 உபகாரச் சம்பளம் அளிக்கப்படலாம்; அதாவது, கற்பித்தல், சாப்பாடு, இருப்பிடம் கட்டணங்கள், புத்தகங்களின் விலை முதலியவை அதில் அடங்கியிருக்க வேண்டும்; ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்த்தப்பட வேண்டும். கல்லூரி ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்சம் ரூ 250 மாதம் ஒன்றுக்கு சம்பளமாக இருத்தல் வேண்டும்; திறமைசாலிகள் உபாத்தியாயர்களாக வருவதற்குக் கல்லூரி ஆசிரியர்களுக்கு இலவசக் வசதி, இ-வசதி, அவர்கள் குழந்தைகளுக்கு கல்லூரிப் படிப்பு வசதி முதலியன அளிப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்," — இவ்வாறெல்லாம் ஆலோசனை போர்டு சிபார்சு செய்துள்ளது.

ஆதித்தன் இடத்தில் ஜோதி!

சென்னை, பிப் 10—
தோழர் எஸ். பி. ஆதித்தன் ராஜிநாமா செய்ததால், சென்னை சட்ட சபையில் மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஸ்தானத்திற்கு, காங்கிரஸ் கட்சி சார்பில், மதுவிலக்கு மந்திரி ஜோதி அம்மையார் தமது அபேட்சைப் பத்திரத்தை தாக்கல் செய்தார்.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்ய 11-ம் தேதி கடைசி தினமாகும். இதுவரை ஒருவரும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யவில்லை.

விவசாயிக்குப் பரிசு!

மதுரை, பிப். 8—
1952, 53-ம் ஆண்டில், உயர்ந்தபட்ச அளவு நெல் உற்பத்தி செய்து, போட்டியில் வெற்றி பெற்ற மதுரை தாலூகா விவசாயி சேவய்யருக்கு ரெவின்யூ போர்டு முதல் மெம்பர் வி என். குபேர இன்று மாலை ரூ 100 ரொக்கப் பரிசளித்தார்.

காஷ்மீர் அ. நி. சபை முடிவு

"சட்ட விரோதம்" என்கிறார் பாக். பிரதமர்

சில்ஹெட், பிப். 10—
காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை இந்தியாவுடன் இணைய ஒருதலை பட்சமாக செய்த முடிவை நிராகரிக்கும்படி பாக். பிரதமர் இந்தியப் பிரதம மந்திரி நேருவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

டில்லி ஒப்பந்தத்திற்கும், ஐ. நா. பந்தோபஸ்து கவுன்சில் தீர்மானத்திற்கும் அந்த முடிவு விரோதமானதென அவர் கூறியுள்ளார்.

காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்படாததால், அது காஷ்மீர் முழுவதற்கும் பிரதிநிதித்வம் வகிக்கவில்லை; ஆகவே, அதன் முடிவு, 'மிகவும் சட்ட விரோதமானது.' என்றும் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினை சமாதானமாகவே தீர வேண்டுமென்பதற்குக் காரணம், தங்கள் பலவீனம் தான் என்று நினைத்தால் அது தவறு என்றும், பயம் காரணமாக பாகிஸ்தான் எந்த நாட்டுக்கும் பணிந்துவிடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு பாகிஸ்தானில் கவர்னர் ஆட்சி?

கராச்சி, பிப். 9—
கிழக்கு பாகிஸ்தானில் இப்போதுள்ள பிரதமமந்திரி நூருல் அமீன் மார்ச்சு மாதம் நடக்கும் தேர்தலுக்கு பிறகு முதல் மந்திரியாக நீடித்திருக்க மாட்டாராம்.

மார்ச்சு 14-ந் தேதியுடன் இப்போதுள்ள சட்டசபையின் ஆயுட் காலம் முடிவடைகிறது. புது மந்திரி சபை ஏற்படும் வரை கவர்னர் ஆட்சி நடக்கும்.

கவர்னர் ஆட்சி ஏற்படுத்தும் யோசனையை கடுமையாக எதிர்த்தாராம். முஸ்லீம் லீக் கட்சியிலேயே இவருக்குப் பலத்த எதிர்ப்பு இருக்கிறதாம்.

"குஜராத்திகளுக்கு உரிமை கிடையாது"

பம்பாய் எதிர்காலம் பற்றி சங்கர ராவ் தேவ்

பம்பாய், பிப். 8—
"ஐக்கிய மகாராஷ்டிர மாநிலம் ஏற்பட்டால், பம்பாய் அதனுடன் சேர்ந்துவிடும்; குஜராத்திகளுக்கு, அதில், எந்தக் காலத்திலும் எந்தவித உரிமையும் கிடையாது,"
என்று சங்கர ராவ் தேவ் கூறியுள்ளார்.

இந்தி வெறியை எதிர்த்து மேலும் இரு மனுக்கள்

பம்பாய் சர்க்கார் பைத்தியத்திற்கு எதிர்ப்பின் மேல் எதிர்ப்பு

பம்பாய், பிப் 10—
6—1—54-ல், பம்பாய் சர்க்கார் ஆங்கிலத்தை போதனா மொழியாகக் கொண்டுள்ள கல்விச்சாலைகளில், ஆங்கிலோ—இந்தியர் நீங்கலாக மற்ற மாணவர்களை சேர்க்கக்கூடாது என்று ஒரு கட்டளையைப் பிறப்பித்தனர்.

இந்த உத்திரவு அரசியல் சட்டத்தின் பல பிரிவுகளுக்கு முரணானது என்று பம்பாய் கல்விக் கழகத்தினர் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர் என்ற செய்தி ஏற்கனவே வெளியாகியுள்ளது.

இப்பொழுது இரண்டு மாணவர்களின் பெற்றோர்கள் சர்க்கார் உத்திரவை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர்.

மாணவி பொண்டா மேரியும் அப்பெண்ணின் தந்தையும் சேர்ந்து கொடுத்துள்ள மனுவில், தாங்கள் இந்திய கிறிஸ்தவர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்றும், தங்களுடைய வீட்டில் பேசப்படுவது ஆங்கிலம் தான் என்றும், சர்க்கார் உத்திரவினால் தாங்கள் விரும்பும் கல்வியைப் பெறுவது முடியாததாகிறது என்றும், இப்படி இந்தியக் குடிகளுக்குள் பட்சபாதம் காட்டுவது அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்றும், குறிப்பிட்டுள்ளனர்.

மனுக்களை ஏற்றுக்கொண்ட பிரதம நீதிபதி பம்பாய் சர்க்காருக்கு சம்மன் பிறப்பிக்கக் கட்டளை பிறப்பித்துள்ளார்.

காவேரி தண்ணீர்

புதுக்கோட்டைக்கு இல்லையாம்!

புதுக்கோட்டை, பிப். 10—
காவேரியிலிருந்து ஒரு கால்வாய் வெட்டி, புதுக்கோட்டைக்குக் காவேரித் தண்ணீரைப் பாசனத்திற்குக் கிடைக்கச் செய்யத் திட்டம் எதுவும் கிடையாதென்று சென்னை அரசாங்க அறிக்கை கூறுகிறது.

காவேரி தண்ணீர் புதுக்கோட்டைக்குக் கிடைக்கும் என்ற வதந்தி தவறானது என்று அரசாங்க அறிக்கை தெளிவுபடுத்தியது.

மாயனூரிலிருந்து புதுக்கோட்டை பிரதேச பாசன வசதிக்காக கால்வாய் வெட்டும் திட்டம் பலதடவை அரசாங்கத்தினால் பரிசீலனை செய்யப்பட்டு கைவிடப்பட்டது என்று மேலும் அவ்வறிக்கை கூறுகிறது.

வாழ்க்கைச் செலவு குறையுமா?

சென்னை, பிப் 10—
சென்னை நகரில் பச்சரிசி விலை அதிகமாயிருக்கிறதே தவிர, சென்னைக்கு வெளியே நெல் விலை இறங்கியேயுள்ளது.

சென்னை வியாபாரிகள் ரொக்கப் பணம் கொடுத்து அரிசியை வரவழைக்க முடியாமலிருப்பதே சென்னை நகரில் அரிசி பற்றாக் குறைக்குக் காரணமெனத் தெரிகிறது.

64 படி கொண்ட நெல் மூட்டை, கலூரில் 19 ரூபாய்தான்! ஒரு ஆண்டிற்கு முன்னால் அதே நெல் விலை 28 ரூபாயாக இருந்தது.

இந்த விலை இறக்கத்தினால் வாழ்க்கைச் செலவுகள் குறையுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

சென்னை சர்க்கார் தொடர்ந்த வழக்கு

சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி

புதுடில்லி, பிப். 10—
அறநிலையச் சட்டத்தின் சில விதிகள் அரசியலுக்கு முரணானவை என்று சென்னை உயர்நீதி மன்றம் அளித்தத் தீர்ப்பை ஆட்சேபித்து, சென்னை சர்க்கார் தாக்கல் செய்திருந்த அப்பீல் இன்று சுப்ரீம் கோர்ட்டாரால் நிராகரிக்கப்பட்டது.

1951 ஆக. 28-ந் தேதி சிதம்பரம் சபாநாயகர் கோவிலுக்கு ஒரு நிர்வாக அதிகாரி நியமித்து, கோயில் சொத்துக்களைக் கட்டுப்படுத்தவும், திருவிழாக்கள், இதர மதச் சடங்குகள் நடத்தவும், அந்த நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமளித்து, பிரஸ்தாப சட்டத்தின் கீழ் ஓர் உத்திரவு சென்னை சர்க்காரால், பிறப்பிக்கப்பட்டது. அதன் மீது நடைபெற்ற வழக்குகள்தான் இவைகளாகும்.

அந்த அறிவிப்பு வாபஸ் பெறப்படுமென சென்னை அட்வகேட் ஜெனரல் வாக்களித்த பின் சுப்ரீம் கோர்ட் ஆரம்பத்தில் கண்டவாறு தீர்ப்பளித்தது.

அந்தப்புரத்தில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கது.

இரண்டு தினங்களுக்குமுன், பிரதமர் கொத்தலாவலையை இலங்கையில் உள்ள இந்தியர் தமிழர் பற்றி இரு நாட்டுப் பிரதமர்களுக்கும் சில நாளைக்கு முன் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கும், பம்பாய் ஆலை அதிபரின் முயற்சிக்கும் ஏதாவது தொடர்பு இருக்கத்தான் வேண்டும் என்பதில் கொஞ்சமாவது உண்மை இருக்கத்தான் இருக்கும்.

கலர் புடவை — இந்திய சர்க்கார் முடிவு

கர்னூல், பிப். 9—
கரை வேஷ்டிகளை தவிர, கலர் புடவை உற்பத்தியை கைத்தறிக்கு ஒதுக்குவதில்லை என்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

ஜாதி வெறியர்கள் தண்டிக்கப்பட்டனர்

'தாழ்த்தப்பட்ட' சிறுவனை பள்ளியில் சேர்த்த ஆசிரியர்களை மிரட்டினர்

கூச்மாண்ட்வி, பிப். 10—
ராபாரில் உள்ள சர்க்கார் பள்ளிகளில் தாழ்த்தப்பட்டவர் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்துக் கொண்டால் ஆசிரியர்களை அடிப்பதாக, அங்குள்ள உயர் ஜாதி இந்துக்கள் அச்சுறுத்தினராம்.

தீண்டாமை விலக்குச் சட்டத்தின் கீழ், வயது சென்ற 9 ஜாதி வெறியர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட் தலா 25 ரூபாய் அபராதம் விதித்தார். கூச் பகுதியிலேயே தீண்டாமை விலக்குச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட முதல் வழக்கு இதுதானாம்.

3 லட்சம் ரூபாய் வருமான வரி

ஏமாற்றியவர் கைது

திண்டுக்கல், பிப். 9—
திருச்சியில் ஜவுளி வியாபாரம் நடத்திவந்த வி. எஸ். எம். ஏ இராமனுதன் செட்டியார் நேற்றுக் காலை 4 மணிக்கு காளையம்புத்தூரில் கைது செய்யப்பட்டார்.

1949 வரை ரூ. 3 லட்சம் வரை வருமானவரி, விற்பனை வரி கொடாமல் அவர் ஏமாற்றியதாகக் கைது செய்யப்பட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத் அக்ராக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூர்ய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.